**தலைப்பு 140 - மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 140 – மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் மாதம் 18 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால்

பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.21 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 மற்றும் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதகைமை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அந்த ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. செயல்நடவடிக்கை திட்டம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிராமை. | 2.3.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கைகள் பேதியளவில் திட்டமிடப்படாமை | 2.5.1 |
| | | 3. பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.14 |
| | | 4. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை. | 2.17 |
| | | 5. உள்ளகக் கணக்காய்விலான குறைபாடுகள். | 2.19 |

| | | | |
|---|---|---|---|
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.8 |
| | | 2. முகாமைத்துவ குறைபாடுகள் | 2.11 |
| | | 3. தீர்க்கப்பட்டிராத கணக்காய்வு பந்திகள் | 2.10 |
| | | 4. இணங்காமைகள் | 2.18 |
| | | 5. மனிதவள முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.20 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 1. எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டம் பெறப்பட்டிராமை. | 2.3.2(ஆ) |
| | | 2. எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன் பெறப்பட்டிராமை. | 2.3.2(இ) |
| | | 3. செயற்திட்டங்களை நிறைவு செய்யாது கைவிட்டுவிடல். | 2.3.2(ஈ) |
| | | 4. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள் | 2.3.2(உ) |
| | | 5. நிதி விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் செயன்முன்னேற்றத்தை பெற்றிராத செயற்திட்டங்கள் | 2.3.2(ஊ) |
| | | 6. காலதாமதத்தின் பின்னர் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள். | 2.3.2(எ) |
| | | 7. வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களை உரிய திகதியில் ஆரம்பிக்கப்பட்டிராமை. | 2.4.1(அ)(ii) |
| | | 8. பெறுகை நடைமுறையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.5.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 9. | உள்ளகக் கணக்காய்வு | 2.19 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | நிறுத்தி வைக்கப்பட்டுள்ள செயற்திட்டத்தின் நிதி | 2.11(அ) |
| | | 2. | வாகனப் பயன்பாட்டிலான குறைபாடுகள். | 2.6(அ) |
| | | 3. | நிதி மற்றும் செயற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களை பயன்படுத்துவதிலான குறைபாடுகள். | 2.6(ஆ) |
| | | 4. | அலுவலகத்தினை நடாத்திச் செல்வதிலான குறைபாடுகள். | 2.6(இ) |
| | | 5. | வெளிவாரி நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள். | 2.6(உ) |
| | | 6. | பொது மக்களுக்கான சேவையை நிறைவேற்றுவதிலான குறைபாடுகள். | 2.12 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரல் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சின் போது பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | 1. | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை. | 2.7(அ) |
| | | 2. | பொறுப்புகள் கூடுதலாக பதிவு செய்யப்பட்டமை. | 2.7(ஆ) |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 1. | ஒதுக்கீடு செய்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.14(அ)(i) |
| | | 2. | மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை. | 2.14(அ)(ii) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3. | குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துவதிலான குறைபாடுகள். | 2.14(அ)(iii) |
| | | 4. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள். | 2.15 |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு | 1. | நட்டங்கள் தொடர்பான பொறுப்பு | 2.9 |

| | | | | |
|---|---|---|---|---|
| | குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல். | 2. | பணம் தொடர்பில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக்கொள்ளப்படாமை. | 2.21 |

**நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிக்கும் பொறுப்புக்கள்**

**------------------------------------------------------------------------**

**நிதிப்பிரமாணம்**

--------------------

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் | 3. | செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிராமை. | 2.3.1 |
| | நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது | 4. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.5.1 |
| | திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் | 5. | பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.14 |
| | நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் | 6. | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை. | 2.17 |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல். | 7. எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தினை அடையப்பெற்றிராமை. | 2.3.2(ஆ) |
| | | 8. எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றிராமை. | 2.3.2(இ) |
| | | 9. செயற்திட்டங்களை நிறைவு செய்யாது கைவிட்டுவிடல். | 2.3.2(ஈ) |
| | | 10 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள் | 2.3.2(உ) |
| | | 11 நிதி விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் செயன்முன்னேற்றத்தை பெற்றிராத செயற்திட்டங்கள் | 2.3.2(ஊ) |
| | | 12 பெறுகை நடைமுறையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள். | 2.5.2 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | 1. எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டம் பெறப்பட்டிராமை. | 2.3.2(ஆ) |
| | | 2. செயற்திட்டங்களை நிறைவு செய்யாது கைவிட்டுவிடல். | 2.3.2(ஈ) |
| | | 3. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள் | 2.3.2(உ) |
| | | 4. வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களை உரிய திகதியில் ஆரம்பிக்கப்பட்டிராமை. | 2.4.1(அ)(ii) |
| | | 5. பெறுகை நடைமுறையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.5.2 |
| | | 6. பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதிலான குறைபாடுகள். | 2.12 |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும் | 1. | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை. | 2.17 |
| | | 2. | இணங்காமைகள். | 2.18 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள். | 2.15 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | 1. | வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்வதிலான குறைபாடுகள் | 2.6(ஈ) |
| | | 2. | சொத்துக்கள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள். | 2.6 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | 1. | செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2.3.1 |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.5.2 |
| | | 3. | பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிராமை. | 2.14(அ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(எ) | அரசாங்கத்திற்கு வருமதியான பணத்தை சேகரிப்பதில் செயன் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கை நாளாந்தம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்பப்படுகின்றதெனவும், | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பில் | 2.15 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும், | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் நிலுவை கடன் மீதியை அறவிடல். | 2.15(அ) |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | 1. எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டம் பெறப்பட்டிராமை. | 2.3.2(ஆ) |
| | | 2. எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்கள் பெறப்பட்டிராமை. | 2.3.2(இ) |
| | | 3. செயற்திட்டங்களை நிறைவு செய்யாது கைவிட்டுவிடல். | 2.3.2(ஈ) |
| | | 4. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள் | 2.3.2(உ) |
| | | 5. பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றத்தை பெற்றிராத செயற்திட்டங்கள் | 2.3.2(ஊ) |
| | | 6. காலதாமதத்தின் பின்னர் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் | 2.3.2(எ) |
| | | 7. வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களை உரிய திகதியில் ஆரம்பிக்கப்பட்டிராமை. | 2.4.1(அ) |

| | | | |
|---|---|---|---|
| | | 8. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கல் | 2.8 |
| 128(1)(ங) | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடை முறையிலுள்ள கட்டளை களுக்கும் அறிவுறுத்தல் களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றனர் எனவும் | உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகளை பெற்றுக்கொள்வதிலான குறைபாடுகள். | 2.21 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | 1. நட்டங்கள் தொடர்பான பொறுப்பு. | 2.9 |
| | | 2. பணம் தொடர்பில் பணியாற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்களை பெற்றுக்கொள்ளாமை. | 2.21 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் வெளியிடப்பட்ட 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியினூடாக பெருந்தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள நிறுவனமாக பெயரிடப்பட்டுள்ள போதிலும், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் இந்த நிறுவனம் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பாக பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ள பிணையால் வரையறுக்கப்பட்டுள்ள கம்பனியொன்றாவதுடன், இந்த அகவிதியின் 44 ஆம் பந்திக்கமைய நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்படும் பணிப்பாளர்களிடையே ஐவர் அரச அமைச்சர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நிறுவனம் இரு பெயர்களால் இனங்காணப்படுவதாக தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2005 இன் 19 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் பணிகளுக்காக ஒதுக்கீட்டு மன்றத்தினால் வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டு சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் தாபிக்கப்பட்டுள்ளது. எனினும், மன்றத்தின் அனைத்து வருமான செலவினங்கள் மற்றும் மூலதன செலவினங்கள் அமைச்சினால்

செலவிடப்பட்டிருந்ததுடன், 2016 யூன் 06 ஆந் திகதிய அமைச்சரவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் புல் பேன்க் தொழிற்பயிற்சி நிலையம், ரம்பொட கலாச்சார நிலையம், நோர்வூட் விளையாட்டுக் கட்டிடம் மற்றும் பிரஜா சக்தி நிலையம் ஆகிய நான்கு நிறுவனங்களையும் அமைச்சிற்கு கையேற்பதற்கு 2016 யூன் 29 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் 2017 ஆம் ஆண்டு முதல் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்துக்குரிய அனைத்து கொடுப்பனவு நடவடிக்கைகளும் இந்த அமைச்சின் நடைமுறைக் கணக்கினூடாக மேற்கொள்வதற்கும், சேகரிக்கப்படும் வருமானம் திரட்டு நிதியத்திற்கும் கணக்கு வைத்தல் இடம்பெற்றவாறு உள்ளது. 2017 ஆம் ஆண்டிற்காக சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் அனைத்து செலவினங்களும் அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் ஞாபகார்த்த மன்ற அதிகாரச்சட்டத்திற்கமைய இரத்துச் செய்தலொன்று இடம்பெற்றிராத போதிலும், அதிகாரச்சட்டத்திற்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதிக் கணக்குகள் அதன் பிரகாரம் சமர்ப்பிக்க முடியாத நிலமையொன்றிற்கு தற்போது உள்ளாகியுள்ளது.

## 2.1 செயலாற்றல்

---------------------

**திட்டமிடல்**

------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுக்கமைய 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய 05 பிரதான பணிப்பொறுப்புக்கள் காணப்பட்டதுடன், அமைச்சின் கீழ் உள்ள 02 நியதிச்சட்ட நிறுவனங்கள், 02 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் மற்றும் 01 நிதியத்திலிருந்தான எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்களை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சின் 2017 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கை 01/2014 இன் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(i) குறித்த ஆண்டிற்கான நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி தொடர்பான விபரங்கள்

(ii) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம்

(ஆ) சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் காணப்பட்ட 2016 யூன் 29 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய புல் பேன்க் தொழிற்பயிற்சி நிலையம், ரம்பொட கலாசார நிலையம், நோர்வூட் விளையாட்டு கட்டிடத் தொகுதி மற்றும் சமூக சக்தி (E-Kiosk) நிலையம் ஆகிய நான்கு நிறுவனங்களையும் அமைச்சினால் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், ஒவ்வொரு நிறுவனங்களாலும் 2017 ஆம் ஆண்டினுள் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் தனித்தனியாக

செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் (Activity Plan) நடைமுறைப்படுத்தப்பட்ட காலச் சட்டகம் (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் / பிரதிபலன் (Output / Outcome) மதிப்பிடப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கை ஒவ்வொரு செயற்திட்டங்களின் கீழான நிதி மற்றும் பௌதீக இலக்குகள் குறிப்பிடப்படாமை மற்றும் மொத்த செயற்திட்டங்களின் பெறுமதியில் நடைமுறைப்படுத்தப்படும் காலம் ஒரு வருட காலமுமாக மாத்திரம் குறிப்பிடப்படுகின்றமையால், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்து ஆண்டினுள் பௌதீக மற்றும் நிதி செயலாற்றலின் உள்ளபடியான நிலைமை அதனூடாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

**2.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

(i) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய அமைச்சினால், 05 பிரதான பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அவற்றுள் 04 பணிகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அவ்வாறு நிறைவேற்றப்படாத ஹட்டன் தொழிற்பயிற்சி நிலையத்தினை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 132 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய வீடமைப்பு நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் பணிப்பொறுப்பினை நிறைவேற்றியமையின் பிரதிபலன்களை பெற்றுக்கொள்வதற்கு (Output) எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், பெறுகைகளை திட்டமிட்டவாறு நிறைவேற்ற முடியாமையால் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினூடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,915 மில்லியனான நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 05 பணிகளை நிறைவேற்றுவதற்காக 16 பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 2,104 மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டம் (Output) அடையப்பெற்றிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய 2017 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 2,500 ஆகும். ஆண்டினுள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையான 692 வீடுகளும், 80 சதவீத பூர்த்தி செய்யப்பட்டுள்ள 455 எண்ணிக்கையான வீடுகளும், 60 சதவீதத்திற்கும் 80 சதவீதத்திற்கும் இடைப்பட்டாக நிறைவு செய்யப்பட்டுள்ள 493 எண்ணிக்கையான வீடுகளும்,

ஆரம்பிக்கப்பட்டிராத வீடுகளின் எண்ணிக்கை 221 ஆகும். இந்த வீடமைப்பு செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் ரூபா 2,000 மில்லியனாக இருந்ததுடன், அந்த பணத்தில் ரூபா 1,431 மில்லியன் அல்லது 72 சதவீதமான நிதி முன்னேற்றமொன்று அடையப்பெற்றிருந்த போதிலும், முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 20.04 சதவீதமாகும்.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் 2018 யூலை 03 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கையினை பரிசோதித்த போது, 05 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 16 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், 04 நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய 08 செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 2.5 சதவீதம் முதல் 54.68 சதவீதத்திற்கு அடைப்பட்டதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்களை (Out come) பெற்றுக்கொள்ளாமை**

---

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 05 பணிகளை நிறைவேற்றுவதற்காக 16 பல்வேறு செயற்திட்டங்களுக்காக ரூபா 2,104 மில்லியனா நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டு, அதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தினை (output) கையேற்றியிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

(i) 7 பேர்ச் அளவான காணியும், வீடும் நீர் மற்றும் மின்சார வசதிகள் அரசினால் வழங்கப்பட்டிருந்த போதிலும் வீடுகளில் அரசினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளின் தொகுதி நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், நுவரெலியா மாவட்டத்தின் 11 தோட்டங்களின் கீழ் 220 பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளுக்கு நலனாளிகள் பல்வேறு குறைபாடுகளை சுட்டிக்காட்டி குடியேறியிருக்காத பல்வேறு சந்தர்ப்பங்கள் கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டன.

(ii) மஹாஊவ வத்த கீழ்ப் பிரிவு ரன் ஹரித 15 வீடுகளுக்குரித்தான ஒப்பந்தப் பெறுமதி ரூபா 9.75 மில்லியனாக இருந்ததுடன், 15 வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும், நீர் விநியோகம் வழங்கப்பட்டிராமையின் அடிப்படையில் கணக்காய்வுத் திகதியான 2017 நவம்பர் 16 ஆந் திகதி வரையிலும் நலனாளிகள் குடியமர்த்தப்பட்டிருக்கவில்லை.

(iii) டெஸ்பர்ட் மேல் மற்றும் கீழ்ப் பிரிவின் நீர் விநியோக செயற்திட்டத்திற்குரியதான ஒப்பந்தப் பெறுமதி ரூபா 2.14 மில்லியனுக்கு நீர்க்குழாய்களை இழைப்பதற்காக புகையிரத திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் கிடைக்காமையினால் நீர் இணைப்பினை பெற்றிராமையின் காரணத்தால் நலனாளிகள் தொடர்ந்தும் தற்காலிக கூடாரங்களில் வசிப்பதாக அவதானிக்கப்பட்டது.

(iv) டெஸ்பர்ட் லேன் பிரிவின் 15 தோட்ட வீடமைப்பு திட்டத்திற்குரிய உடன்படிக்கை பெறுமதியான ரூபா 9.75 மில்லியனாக உள்ளதுடன், இந்த வீடுகள் 2017 நவம்பர் 15 ஆந் திகதி அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் மின்சாரம் இல்லாதிருந்தமையால் எந்தவொரு நலனாளியும் குடியேறியிருக்கவில்லை.

(v) தோட்டப் பிரிவின் கீழ் தேசிய நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக 2016 மார்ச் மாதம் இந்த அமைச்சினால் அரங்கேற்றப்படும் பெருந்தோட்ட சமுதாய சமூக அபிவிருத்திக்கான தேசிய செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய 2016 - 2020 ஆகிய ஐந்து வருடங்களினுள் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள இலக்குகளுக்கமைய 2017 ஆம் ஆண்டிற்குரிய அடைவு இலக்குகள் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைவான இலக்க அடைவு ஆகியவற்றுக்கிடையே கருத்திற்கொள்ளக் கூடிய வேறுபாடொன்று பின்வருமாறு நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

| **தொடர் இலக்கம்** | **செயற்திட்டம் / பணிகள்** | **2016 – 2020 பெருந்தோட்ட சமுதாய சமூக அபிவிருத்திக்கான தேசிய செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய** | | **2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கமைய இலக்குப் பூர்த்தி** | **வேறுபாடு** | **சதவீதம்** |
|---|---|---|---|---|---|---|
| | | **மொத்த இலக்கு பூர்த்தி** | **2017 ஆம் ஆண்டிற்குரிய இலக்கு பூர்த்தி** | | | |
| | | அலகுகள் | அலகுகள் | அலகுகள் | அலகுகள் | |
| 01 | லயன் வீடுகளின் கூரைகளை மீண்டும் வேய்தல் | 50,000 | 10,000 | 1640 | 8,360 | 83.6 |
| 02 | சுத்தகரிப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் - மலசல கூடங்களை நிர்மாணித்தல் | 20,000 | 4,000 | 650 | 3,350 | 83.75 |
| 03 | சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை மேம்படுத்தல் | 1,000 | 25 | 23 | 2 | 8 |
| 04 | ஹரித ரன் வீடமைப்பு செயற்திட்டம் | 52,500 | 10,500 | 2,500 | 8,000 | 76.2 |

**(ஈ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்**

(i) அமைச்சினால் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாது கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லயின் | | ரூபா | |
| வீடமைப்பு செயற்திட்டம் நுவரெலியா மாவட்ட பெல்மோரல் Cranely | 25 | 28/04/2017 | இல்லை | பொருத்தமானதொரு காணியை கண்டறிய தவறியமை |
| வீடமைப்பு செயற்திட்டம் மில்லவிடிய / பாரகெட்டிய இரத்தினபுரி மாவட்டம் | 1 | 27/07/2017 | 25,000 | நலனாளிகள் அந்த இடத்தினை விரும்பாமை. |
| வீடமைப்பு செயற்திட்டம் - கில்லிநரி க்ரைஹெட் - ஹட்டன் | 30 | 27/04/2017 | இல்லை | பொருத்தமானதொரு காணியை கண்டறிய தவறியமை |
| வீடமைப்பு செயற்திட்டம் தெரேசியா சம்மர் செட் - கண்டி மாவட்டம் | 15 | 24/04/2017 | இல்லை | பொருத்தமானதொரு காணியை கண்டறிய தவறியமை |
| வீடமைப்பு செயற்திட்டம் - கல்முதுன - கண்டி மாவட்டம் | 15 | 24/04/2017 | 375,000 | காரணமொன்று கோவையில் குறிப்பிடப்பட்டிராததுடன், விளக்கமளித்தலொன்றும் கிடைத்திருக்கவில்லை. |

(ii) 2017 ஆம் ஆண்டினுள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 151 மில்லியன் பெறுமதியான 151 வீடுகள் 2017 ஆம் ஆண்டுடன் ஆரம்பிக்கப்பட்டேனும் இல்லாதிருந்த வீடமைப்பு செயற்திட்டமாக காணப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

| மாவட்டம் | தோட்டம் | | வீடுகளின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| காலி | கொபொவெல | கொபொவெல | 21 | 21,000,000 |
| | வில்ல கந்த | சென்ட் பிரான்சிஸ் | 6 | 6,000,000 |
| | வில்ல கந்த | என்ரசன் | 05 | 5,000,000 |
| | வில்ல கந்த | விகிரி சீ கேரல | 04 | 4,000,000 |
| | வில்ல கந்த | நிவ் | 05 | 5,000,000 |
| | பெலவத்த | கேவெஸ்ஸ லோவர் | 05 | 5,000,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஹட்டன் | ஸ்டிரேடன் | ஸ்டிரேடன் | 50 | 50,000,000 |
| | டஸ்வோர்ன் | கெஸ்ட்லோரவ் | 30 | 30,000,000 |
| | ஹெரின்டன் | | 25 | 25,000,000 |
| | | | ------------ | ---------------- |
| | **மொத்தம்** | | **151** | **151,000,000** |
| | | | ====== | ========= |

**(உ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்**

(i) அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள் அவதானிக்கப்பட்டன

| **செயற்திட்டம்** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** | **ஆரம்பிக்கப்பட்ட திகதி** | **பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி** | **2017 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்ட சதவீதம்** | **2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செலவினம்** | **தாமதத்திற்கான காரணம்** |
|---|---|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | | | **சதவீதம்** | **ரூபா மில்லியன்** | |
| காலி மாவட்டம் | | | | | | |
| 10 வீடமைப்பு செயற்திட்டங்கள் | 149.00 | 2017 ஏப்ரல் | 2017 திசெம்பர் | 20 -73 | 63.71 | காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| 01 வீடமைப்பு செயற்திட்டம் | 16.25 | 2016 யூன் | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 99 | 16. 23 | காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| பதுள்ள மாவட்டம் | | | | | | |
| 07 வீடமைப்பு செயற்திட்டங்கள் | 231.00 | 2017 ஏப்ரல் | 2017 திசெம்பர் | 22 - 69 | 115.61 | காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| 01 வீடமைப்பு செயற்திட்டம் | 30.55 | 2016 ஒக்தோபர் | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 80 | 24.32 | பொருத்தமான காணியொன்றை தேடுவதற்கு தவறியமை |
| கேகாலை மாவட்டம் | | | | | | |
| 05 வீடமைப்பு செயற்திட்டங்கள் | 85.00 | 2017 ஏப்ரல் | 2017 திசெம்பர் | 0 - 95 | 39.10 | பட்டியல்களை சமர்ப்பிப்பதிலான தாமதம் |
| 06 வீடமைப்பு செயற்திட்டங்கள் | 74.10 | 2016 மே | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 43 -84 | 40.97 | பட்டியல்களை சமர்ப்பிப்பதிலான தாமதம் |
| 01 வீடமைப்பு செயற்திட்டம் | 7.80 | 2015 மார்ச் | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 34 | 2.69 | பட்டியல்களை சமர்ப்பிப்பதிலான தாமதம் |
| இரத்தினபுரி மாவட்டம் | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 வீடமைப்பு செயற்திட்டம் | 163.00 | 2017 மார்ச் | 2017 திசெம்பர் | 20 - 80 | 47.30 | பொருத்தமான காணியொன்றை தேடுவதற்கு தவறியமை |
| 04 வீடமைப்பு செயற்திட்டங்கள் | 53.30 | 2016 மே | குறிப்பிடப்பட்டிருக் கவில்லை | 54 - 85 | 36.22 | பொருத்தமான காணியொன்றை தேடுவதற்கு தவறியமை |
| ஹட்டன் மாவட்டம் | | | | | | |
| 24 வீடமைப்பு செயற்திட்டங்கள் | 653.00 | 2017 ஏப்ரல் | 2017 யூன் | 20 - 80 | 272.21 | காரணங்கள் முன்வைக்கப்பட் டிருக்கவில்லை. |
| 3 வீடமைப்பு செயற்திட்டங்கள் | 148.74 | 2016 யூன் | காரணங்கள் முன்வைக்கப்பட்டி ருக்கவில்லை. | 33 -84 | 68.57 | காரணங்கள் முன்வைக்கப்பட் டிருக்கவில்லை. |
| 01 வீடமைப்பு செயற்திட்டம் | 9.75 | 2015 சனவரி | காரணங்கள் முன்வைக்கப்பட்டி ருக்கவில்லை. | 77 | 7.51 | பட்டியல்கள் தாமதித்து சமர்பிக்கப் பட்டமை |
| கண்டி மாவட்டம் | | | | | | |
| 11 வீடமைப்பு செயற்திட்டங்கள் | 213.00 | 2017 மே | 2017 நவம்பர் | 20 - 80 | 98.47 | காரணங்கள் முன்வைக்கப்பட் டிருக்கவில்லை. |
| 05 வீடமைப்பு செயற்திட்டங்கள் | 52.00 | 2016 மே | | 54 - 84 | 37.81 | பட்டியல்களை சமர்ப்பிப்பதிலா ன தாமதம் |
| நுவரெலியா மாவட்டம் | | | | | | |
| 14 வீடமைப்பு செயற்திட்டங்கள் | 330.00 | 2017 ஏப்ரல் | 2017 ஒக்தோபர் | 20- 80 | 177.26 | பல மாதங்கள் வேலை நிறுத்தப்பட்டிருந் தமை |
| 1 வீடமைப்பு செயற்திட்டங்கள் | 37.70 | 2016 சனவரி | காரணங்கள் முன்வைக்கப்பட்டி ருக்கவில்லை. | 14 - 50 | 5.35 | தாமதித்து ஆரம்பிக்கப் படல் |

(ii) 2017 பெப்ரவரி 06 ஆந் திகதிய அமப/17/0306/739/002 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் இடர்களுக்கு உள்ளானவர்களுக்காக ஹரிதரன் வீடுகளின் கீழ் நிர்மாணிக்கப்படுவதுடன், அந்த வீடுகள் முழுமையான அரச உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டிற்குரியதாக கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட செயற்திட்டம் தொடர்பான செயல்முன்னேற்ற (செயலாற்றல்) அறிக்கைக்கமைய அங்கீகரிக்கப்பட்ட 367 வீடுகளில் பணி பூர்த்தி செய்தலின் நிலைமையானது, ஆரம்பக் கட்டத்தில் 162 வீடுகளும், முதலாம் கட்டத்தின் 60 வீடுகளும், மூன்றாம் கட்டத்தில் 12 வீடுகளுமாக உள்ளதுடன், மேலும் 133 வீடுகள் ஆரம்பிக்கப்பட்டேனும் இருக்கவில்லை. செயற்திட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அல்லது செயலாற்றல் அறிக்கையினுள் ஆரம்பிக்கப்பட்ட காலம் மற்றும் நிறைவு செய்த காலம் குறிப்பிடப்பட்டிராமையால், நிர்மாணங்களின் தாமதத்தினை முடியாதிருந்தது.

(iii) கடந்த வருடத்தில் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களுக்கமைய அமைச்சின் 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 937 வீடுகுள் நிறைவு செய்யப்பட்டிராததுடன், அந்த வீடுகள் 2016 திசெம்பர் முதல் 2017 நவம்பர் வரையான காலப்பகுதியினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 479 மாத்திரமாகும். அதற்கமைய 458 வீடுகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாது காணப்பட்டன.

**(ஊ) பணம் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் செயன்முன்னேற்றத்தினை பெற்றிராத செயற்திட்டங்கள்**

---

நிர்மாணங்கள் தொடர்பில் கட்டிடங்கள் திணைக்களம், இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை போன்ற நிறுவனங்களுக்கு முழுத் தொகையும் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், வேலை தொடர்பான உரிய செயன்முன்னேற்றமொன்று இல்லாதிருந்த சந்தர்ப்பங்கள் பின்வருமாறு ஆகும்.

(i) மெத கும்புர வத்த கீழ் பிரிவின் 18 வீடுகள் செயற்திட்டத்திற்காக ஒப்பந்தப் பெறுமதி ரூபா 14.95 மில்லியனாவதுடன், 2016 திசெம்பர் 25 ஆந் திகதி 18 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு ஆட்களை குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், 05 வீடுகளின் நலனாளிகள் கணக்காய்வு திகதி வரையிலும் வீடுகளில் குடியேறியிருக்கவில்லை.

(ii) மெத கும்புர வத்த மேல் பிரிவின் விளையாட்டுத் திடலின் அபிவிருத்திக்காக, பெருந்தோட்ட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மெத கும்பர தோட்ட கூட்டுறவுச் சங்கத்துடன் ரூபா 1.41 மில்லியனுக்கு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஒக்தோபர் 06 ஆந் திகதி அதன் அபிவிருத்தி பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியதுடன், 2017 நவம்பர் 16 ஆந் திகதி வரையிலும், பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலையில் விளையாட்டுத் திடல் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) காலதாமதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

---

செயற்திட்டங்கள் தாமதித்து ஆரம்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(i). டயகம ஈஸ்ட் 3rd டிவிசன் கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 2,120,400 ஆக இருந்ததுன், அதனை நிர்மாணிப்பதற்காக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் தோட்ட கூட்டுறவு சங்கத்துடன் 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், 2018 பெப்ரவரி 03 ஆந் திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், இந்த நிர்மாணத்திற்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி ஒழுங்கமைப்பின் அறிக்கை இதுவரையிலும் கிடைத்திராமையால் அத்திவாரம் வெட்டுதல் மாத்திரம் 2017 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii). 27 யூலிபீல்ட் வீடமைப்பு செயற்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 27 மில்லியனா இருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் 2017 மே 16 ஆந் திகதி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2017 நவம்பர் 15 ஆந் திகதி பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2017 நவம்பர் 20 ஆந் திகதி

கணக்காய்வு திகதி வரையிலும் வீடுகளுக்காக 22 அத்திவாரங்கள் மாத்திரம் மூடப்பட்டிருந்ததுடன், மேலும் 05 வீடுகளுக்காக காணிகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

(iii). 50 டிரேடன் தோட்ட வீடுகள் செயற்திட்டத்திற்காக ரூபா 49.40 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியாவதுடன், வீடுகளை நிர்மாணித்தல் தோட்டத்தின் கூட்டுறவு சங்கத்தினால் ஏசர் ஜே இன்ஜினியரிங் லங்கா தனியார் கம்பனிக்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம், 2017 நவம்பர் 15 ஆந் திகதி பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுத் திகதியான 2017 நவம்பர் 21 ஆந் திகதியில் உள்ளபடியான இந்த 50 வீடுகள் 19 வீடுகளின் அத்திவாரம் மாத்திரம் வெட்டப்பட்டிருந்ததுடன், மேலும், 08 வீடுகளின் அத்திவாரம் இடப்பட்டு கம்பங்கள் பகுதிளவில் நிறைவு செய்யப்பட்டிருந்தன. எஞ்சிய 23 வீடுகளுக்கான காணிகளேனும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv). தலவாக்கல 20 வீடுகள் திட்டத்திற்கான ஒப்பந்த பெறுமதி ரூபா 19.76 மில்லியனாக இருந்ததுடன், 2017 நவம்பர் 15 ஆந் திகதி பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியதுடன், நுழைவுப் பாதையில் சிக்கலொன்று உருவாகியமையால் கணக்காய்வு திகதியான 2017 நவம்பர் 21 ஆந் திகதி வரையிலும் 20 வீடுகளின் அத்திவாரம் இடப்பட்டு, 14 வீடுகளில் ப்லின்த் பீம் இடப்பட்டவாறு இருந்தது.

## 2.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 36 நாட்கள் தாமதித்து, 2018 யூலை 05 ஆந் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம் குறைபாடுகளுடன் தயாரிக்கப்பட்டிருந்தமையால் செயலாற்றலை மதிப்பிட முடியாதிருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

(i). கிராமிய பிரதேசங்களின் வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சமூக அபிவிருத்திக்கான வசதிகளை வழங்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 9.4 மில்லியனான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், அதன் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள பணிகள், இலக்குப் பூர்த்திகள் மற்றும் அளவீட்டு அலகுகள் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் குறிப்பிடப்பட்டிராமையால் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முன்னேற்றத்தை அளவிட முடியாதிருந்தது.

(ii). வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 02 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழான 04 செயற்திட்டங்களுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது இலக்கிடப்பட்ட அடைவுகளின் எண்ணிக்கை உள்ளடக்கப்பட்டிராமையால், அந்த பணிகளின் செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டுள்ளமையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

(iii). பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களுக்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த இலக்கு அடைவுகள் மற்றும் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த இலக்கு அடைவு ஆகியவற்றுக்கிடையே வேறுபாடொன்றினை காண்பித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.

| நிகழ்ச்சித்திட்டம் | செயற்திட்டம் / பணிகள் | அளவீட்டு அலகு | செயல் நடவடிக்கைத் திட்டத்திற் கமைவான இலக்குப் பூர்த்தி | செயலாற்றல் அறிக்கைக் கமைய இலக்குப் பூர்த்தி | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| பின்தங்கிய பிரதேசங்களின் சமூக பொருளாதார அபிவிருத்தி | நீர்வழங்கல் முன்மொழிவுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | பூர்த்தி செய்யப்பட்ட நீர் வழங்கல் முறைமைகளின் எண்ணிக்கை | 80 | 69 | (11) |
| | குழந்தைகள் அபிவிருத்தி நிலையத்தை அபிவிருத்தி செய்தல் | நிறைவு செய்யப்பட்ட குழந்தைகள் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை | 23 | 25 | 2 |
| | ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் | பூர்த்தி செய்யப்பட்ட சிறு செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 500 | 1000 | 500 |

**2.4 அமுல்படுத்தப்பட்டிருந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்**

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் உள்நாட்டு நிதிகளை பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 2,600 மில்லியன் நிதியேற்பாடு மற்றும் 02 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,420 மில்லியனான நிதியேற்பாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றுள் முறையே ரூபா 1,741.39 மில்லியன் மற்றும் ரூபா 362.99 மில்லியனுமாக ரூபா 2,104.38 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 1,915.62 மில்லியன் அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் மில்லியன், அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் 47.65 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

| செயற்திட்ட வகை | செயற்திட்டத்தின் பெயர் | செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் | ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| உள்நாட்டு நிதியச் செயற்திட்டம் | கிராமப் பிரதேசங்களின் வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல் | வருமானமீட்டனினை அதிகரித்தல், தொழில்சார் பயிற்சி மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல், போசனை மட்டத்தினை உயர்த்துதல் மூலம் வறுமையை ஒழித்தல் | 100.00 | 34.13 | 65.87 |
| உள்நாட்டு நிதியச் செயற்திட்டங்கள் | பின்தங்கிய பிரதேசங்களின் சமூக பொருளாதார அபிவிருத்தி செயற்திட்டம் | சுத்தமான குடிநீர், சுத்தகரிப்பு சேவைகள் வழிபாட்டுத்தல வசதிகள், ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதன் மூலம் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் பாடசாலை கல்வியினை உறுதிப்படுத்தல் | 500.00 | 276.04 | 223.96 |
| உள்நாட்டு நிதிய செயற்திட்டம் | தோட்ட வீடுகள் நிகழ்ச்சித்திட்டம் | லயன் அறைகளை நீக்கி புதிய குடியிருப்புக்களை வழங்குதல். | 2,000.00 | 1,431.22 | 568.78 |
| வெளிநாட்டு உதவிச் செயற் திட்டம் | ஹட்டன் தொழிற்பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்தல் | நவீன தொழில்நுட்ப பாடநெறியை ஆரம்பித்து தொழிற் கல்வியை மேம்படுத்தல் | 120.00<br>12.00 | 0<br>0 | 120.00<br>12.00 |
| வெளிநாட்டு உதவிச் செயற் திட்டம் | இந்திய அரசின் உதவியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | இடர்கள் நேரும் பிரதேசங்களில் வாழ்வோருக்கு பாதுகாப்பான குடியிருப்புக்களை வழங்குதல் | 1,134.00<br>154.00 | 346.01<br>16.90 | 787.91<br>137.10 |

**2.4.1 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வெளிநாட்டு உதவி செயற்திட்டத்தின் செயலாற்றல்**

(i) இந்திய அரசின் உதவிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,288 மில்லியனான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தின் முதலாவது கட்டமாக 1,134 வீட்டு அலகுகளை நிர்மாணிக்கும் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு உள்ளதுடன், 2017 திசெம்பர் மாதத்தின் இறுதிவரையிலும் 100 வீடுகளின் நிர்மாணங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 1,034 வீடுகள் பல்வேறு நிர்மாணக் கட்டணங்களில் காணப்படுகின்றன. இந்த வீடமைப்பு செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டிற்காக அரசினால் ரூபா 17 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் மொத்த செலவினம் ரூபா 365 மில்லியனாகும். அவற்றுள் இதுவரையிலும் செலவிடப்பட்டுள்ள ஒட்டுமொத்த உள்நாட்டு நிதியத்தின் அளவானது ரூபா 19 மில்லியனாகும். அந்த செயற்திட்டத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு அரச நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 154 மில்லியன் 2017 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 16.895 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ii) இந்திய அரசின் உதவியின் கீழ் ஹட்டன் தொழில்பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 120 மில்லியனான வெளிநாட்டு உதவிகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய செய்றதிட்ட முன்மொழிவினை தயாரித்தல் தாமதமடைந்தமையால் அந்த பணம் 2017 ஆம் ஆண்டினுள் செலவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.2 அரச தனியார் பங்குடமையின் அடிப்படையில் வீடுகளை நிர்மாணித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சு மற்றும் கம்பனியொன்றுடன் 2017 செப்தெம்பர் 07 ஆந் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கமைய ரூபா 900,000 பெறுமதியான வீடொன்றினை நிர்மாணிப்பதற்காக அமைச்சு ரூபா 500,000 கம்பனி ரூபா 350,000 மற்றும் நலனாளியால் ரூபா 50,000 ஈடுபடுத்தப்படுவதுடன், 10 வீடுகளுக்காக அமைச்சின் கிரயம் ரூபா 5,000,000 செலவிடப்பட்டுள்ளதுடன், அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட திறைசேரியின் அங்கீகாரம் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்படி ‘‘அ’’ பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி இலங்கையினுள் 2006 ஆம் ஆண்டிலிருந்து தாபிக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தின் பிரதான வருமான வழியானது வெளிநாட்டு உதவிகள் என்பது நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களுக்கமைய அவதானிக்கப்பட்டது. அதற்கமைய வெளிநாட்டு உதவிகளின் கீழான அந்த செயற்திட்டம் தொடர்பில் நிதிப்பிரமாணம் 610 இன் பிரகாரம் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், திறைசேரியுடன் இடம்பெற்ற எவ்விதமான கடிதப் பரிமாற்றலும் இடம்பெற்றிருக்காததுடன், 2017 ஆம் ஆண்டிற்காக மேற்படி அரச சார்பற்ற அமைப்பு மேற்கொண்ட பணம் கணக்கு வைக்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சினால் மேற்படி கம்பனிக்கு 10 வீடுகளை நிர்மாணிப்பதற்கு முன்மொழிவொன்றினூடாகவே ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன்,

வீட்டுரிமையாளர்கள் அவர்களாலேயே தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 2.5 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

2017 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீட்டு ஒதுக்கங்களினூடாக பின்வரும் செலவின விடயங்களுக்குரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை செலவிடல் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். அமைச்சினால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கமைய செயற்பட்டவாறு வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 2,009.61 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 1,445.61 மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 564 மில்லியன் அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 28.06 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.5.1 பெறுகைகளை திட்டமிடல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ரூபா 2,009.61 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 1,445.61 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு தொடர்பில் தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைத் திட்டம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

#### (அ) பெறுகைத் திட்டமிடல் மற்றும் ஆரம்ப கட்டம்

திட்டம் மற்றும் ஆவணங்களை பரீட்சித்தல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). பிரதான பெறுகைத்திட்டம் இல்லை.
(ii). பெறுகைத் தொகுதி பொழிப்பு இல்லை.
(iii). ஆரம்ப பெறுகைத்திட்டம் இல்லை.
(iv). இனங்காணப்பட்ட பெறுகைகளுக்குரியதாக காணப்படும் விசேட அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள தேவையான ஆவணங்கள் காணப்படவில்லை.
(v). அமைப்புக்குறிப்பீடுகள், திட்டம், குறிப்புகள், நிர்ணயங்கள் ஆகியன அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) முன் ஒப்பந்த கட்டம்

இந்தக் கட்டிடத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒவ்வொரு ஒப்பந்த தொகுதி மற்றும் பெறுகைக் காலப் பட்டோலை (பி.கா.உ) இல்லை.
(ii) வேலை பொருட்கள் மற்றும் சேவைகளின் விரிவான பெறுகைத் திட்டமொன்று காணப்படவில்லை.
(iii) மதியுரை சேவைகளுக்காக விரிவான பெறுகைத் திட்டமொன்று இல்லாதிருந்தமை.

**(இ) பின் ஒப்பந்த (ஒப்பந்த நிர்வாகம்) கட்டம்**

-----------------------------------------------------------------------

இந்த கட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்த நிர்வாகத் திட்டம் (கொ.ப) இல்லை.

(ii) நிர்வாகத் திட்டத்துடன் இணைக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் திட்டம் இல்லாதிருத்தல்.

**2.5.2 பெறுகை நடைமுறையை அமுல்படுத்தல்**

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினூடாக நிறைவேற்றப்படும் செயற்திட்டங்கள் தொடர்பில் அமைச்சில் நிலவுகின்ற ஒப்பந்த நிர்வாகம் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினூடாக நிறைவேற்றப்படும் அனைத்து ஒப்பந்த நிர்மாணங்களுக்காக அமைச்சிற்காக தோட்ட தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவு சங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. பெறுகைகள் வழிகாட்டியின் மற்றும் பெறுகைகள் வழிகாட்டலின் 3.9.4 பந்திக்கமைய கூட்டுறவு சங்கத்திற்கு ரூபா 2 மில்லியன் கூட்டுத்தொகையை விட அதிகமான ஒப்பந்தங்கள் வழங்கப்படக்கூடாததுடன், குறிப்பானதொரு காலப்பகுதியினுள் அமைப்பொன்றினால் நிறைவேற்றப்படும் மொத்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை மூன்றை விட அதிகமாக இருக்கக்கூடாது. எவ்வாறெனினும், பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை மிகைத்து அந்தந்த தோட்டச் சங்கங்களுக்குரிய அனைத்து நிர்மாணங்களும் அந்த சங்கங்களுக்கு வழங்குதலும், அந்த சங்கங்களூடாக பெறுகைகள் வழிகாட்டி 3.9.1 இற்கு முரணாக உப குத்தகை வழங்குதலும் அவதானிக்கப்பட்டது. மேலும், தனியார் நிறுவனமொன்றான பெருந்தோட்ட மனிதவள நம்பிக்கைப் பொறுப்பு அமைச்சிற்காக ஒப்பந்த நிர்மாணங்களுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடுவதுடன், அவ்வாறு மேற்கொள்வதற்கு பெற்றுக்கொண்ட அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கிரீன் கோல்ட் வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களினுள் 2017 ஆம் ஆண்டினுள் 329 வீட்டு அலகுகளைக் கொண்ட 18 செயற்திட்டங்களுக்காக ரூபா 329 மில்லியன் மற்றும் அதற்கான முகாமைத்துவ கட்டணங்களுக்காக ரூபா 19.7 மில்லியன் ஒதுக்கிடு செய்யப்பட்டு 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 173.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 155.2 மில்லியன் செலுத்துவதற்கும் (பொறுப்பொன்று) காணப்பட்டது. அதற்காக முகாமைத்துவ கட்டணத்தில் ரூபா 7.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இந்த வீடுகளின் கீழான பௌதீக பரிசோதனையில் 106 வீட்டு அலகுகளை கொண்ட 6 வீட்டு செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 100.5 மில்லியன் நிர்மாணங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. பரிசோதிக்கப்பட்ட வீடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் நியமொன்றில்லாது குறைவான தரத்தினை கொண்டவையாக இருந்ததுடன், பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் நிர்மாணப் பணிகளில் ஈடுபடுத்தி நியமமொன்றில்லாது நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(iii) முன் பூர்த்தி ஒப்பந்த முறைமையின் கீழ் பூர்த்தி செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட செயற்திட்டமொன்றாக 50 வீடுகள் ரூபா 50 மில்லியனுக்கு நிர்மாணிப்பதற்கு அமைச்சின் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்ட நிர்மாணம், டிரேடன் தோட்டப்புற சங்கத்திற்குரிய தோட்ட கூட்டுறவு சங்கத்திற்கு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் வழங்கப்பட்டிருந்தது. அந்த தோட்ட சங்கத்தினால் அரசாங்க பெறுகைகள் நடைமுறைக்கு மீண்டும் உப ஒப்பந்தமாக 2016 திசெம்பர் 09 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(iv) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 பந்திக்கமைய ரூபா 250,000 மிகைத்து எந்தவொரு வேலை ஒப்பந்தத்திற்காகவும் எழுத்து மூல ஒப்பந்த உடன்படிக்கையொன்றுக்கு உட்பட வேண்டிய போதிலும், ஒப்பந்தத்தை கையளிப்பதற்காகவும் இதுவரையிலும் பணிகளை உள்ளடக்குவதற்கு தேவையான அடிப்படை உடன்படிக்கையொன்று அமைச்சு மற்றும் மேற்படி தனியார் கம்பனி ஆகியவற்றுக்கிடையே அல்லது பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் அந்த கம்பனிக்கிடையே இருந்தமைக்கான சான்றுகள் முன்வைக்கப்படவில்லை.

(v) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.1(அ) வழிகாட்டிக்கமைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் பணிப்பாக செயற்திட்டங்களின் பணிகளுக்காக செயற்திட்டங்கள் ஒப்பந்தங்களுக்குரிய அனைத்து பணிகளும் மேற்பார்வை செய்யப்படுவதாகவும் மதிப்பீடு செய்யப்படுவதாகவும், உறுதிப்படுத்துவதற்காக பெறுகை நிறுவனம் (அமைச்சு) பொறுப்புக்கூற வேண்டியதுடன், கையேற்பதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள சேவைகளிலும், நிறைவேற்றப்பட்டுள்ள பணிகளின் தரமும் சுயாதீனமாக பரீட்சிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் நிறைவேற்றப்படும் செயற்திட்டங்கின் ஒப்பந்தங்களுக்குரிய மதிப்பீடுகளை சான்றுறுதிப்படுத்தும் பணிகள் நீங்கலாக மதியுரை சேவைகளை வழங்குதல், ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்தல், கண்காணிப்பு, பணம் செலுத்துதல் போன்றன தொடர்பில் அவ்வாறு இடம்பெறுவதில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளுக்கமைய அவதானிக்கப்பட்டது.

- ❖ கொட்டியாகல 184 வீடுகளை நிர்மாணிப்பதற்காக கேள்வியினை கையளிக்கும் போது ஒப்பந்தகாரரின் முன் தகைமை பரிசோதிக்கப்படாதும் நான்காவது ஆகக் குறைந்த விலையினை மதிப்பாய்வு செய்யாமலும் வெளிப்படைத்தன்மையற்று, ஐந்தாவது ஆகக்குறைந்த விலையினை முன்வைத்த ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டு 2016 மே 23 ஆந் திகதி ஒப்பந்தகாரருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ உடன்படிக்கையில் ஆரம்ப மற்றும் முடிவுத் திகதிகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

- ❖ நிபந்தனைகள் எதுவும் குறிப்பிடப்பட்டிராததுடன் நிபந்தனைகள் இல்லாத போது எடுக்கப்படும் நடவடிக்கைகளும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

- ❖ ஒப்பந்த பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை

❖ தாமதக் கட்டணம் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நுவரெலியா மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களில் ரூபா 1,392.73 மில்லியன் பெறுமதியான வீடுகள் மற்றும் ரூபா 23.30 மில்லியன் பெறுமதியான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் தொடர்பான பௌதீக பரிசோதனையொன்றினை மேற்கொள்ளும் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) தோட்ட அமைப்புகளிடமிருந்து உப ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் பணிகளை பூர்த்தி செய்யும் இயலுமை தொடர்பில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் பரீட்சித்தலொன்று இடம்பெற்றிராததுடன், நிர்மாணங்கள் மற்றும் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்க வேண்டிய ஒப்பந்தங்கள் போதியளவான இயலுமை இல்லாத ஒப்பந்தக்காரர்களால் மற்றும் ஒப்பந்தக்காரராக பதிவு செய்திராத நபர்களால் நிறைவேற்றப்படுவதாக தளப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) மதிப்பீடு மற்றும் தொழிற் துறையில் காணப்படும் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட அளவைகளிடையே பாரியளவான வேறுபாடுகள் நிலவின. ‘‘கிறீன் கோல்ட் ஹவுசின்’’ செயற்திட்டத்தின் திட்டத்திற்குரிய பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் மதிப்பீடு நுவரெலியா மாவட்டத்தினுள் காணப்படும் கட்டிடங்கள் அங்கீகரிக்கப்பட்ட அளவீடுகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் மதிப்பீட்டினை விட 30 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் கூட்டுறவு சங்கங்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அமைச்சின் செயற்திட்டங்கள் அந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன், கூட்டுறவு சங்கங்களால் ஒப்பந்த இயலுமை பரிசோதிக்கப்படாது உப ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய வருடமொன்றிற்கு பத்து மில்லியனுக்கு அதிகமான செயற்திட்டங்கள் பெறுகை நடைமுறைக்கு புறம்பாக ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) அனைத்து செயற்திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு முன்னர் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதன் பரிந்துரைகளுக்கமைய செயற்பட்டுள்ளதா என கணக்காய்வின் போது திருப்தி கொள்ள முடியாதிருந்தது. மேலும், வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் குடியேறுவதற்கு முன்னர் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பின் பரிந்துரைகளுக்கமைய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டதாக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொண்டதாக சான்றுகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாகனங்களின் பயன்பாடு

(i) அமைச்சிற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையில் 122 வாகனங்கள் மற்றும் உந்துருளிகள் காணப்பட்டதுடன், அவற்றுள் அமைச்சிற்கு சொந்தமான வாகனங்கள் 30 மாத்திரமாவதுடன், 3 வாகனங்கள் வாடகை அடிப்படையிலும், எஞ்சிய 89 வாகனங்கள் தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்திற்கு உரித்தானவையாகும். மேற்படி 122 வாகனங்களில் 13 வாகனங்கள் அமைச்சினால் ஒதுக்கப்பட்ட வாகனங்களாகவும், தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்திற்கு சொந்தமான 84 உந்துருளிகள் இணைப்பு உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டும் பயன்படுத்தப்படுகின்றது. அதற்கமைய எஞ்சிய 25 வாகனங்களில் 03 வாகனங்கள் ஆண்டு முழுவதும் மற்றும் ஒரு வாகனம் 10 மாதங்களாகவும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது இருப்பதுடன், எஞ்சிய 21 வாகனங்கள் குழாம் வாகனங்களாக பயன்படுத்தப்படுகின்றன. அந்த 21 வாகனங்களில் 4 வாகனங்களுக்காக ஆண்டு முழுவதும் மற்றும் 2 வாகனங்களுக்காக 9 மாதம் முதல் 6 மாதங்களுக்கு இடைப்பட்ட ஓட்டக் குறிப்புக்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சிற்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் 122 வாகனங்கள் காணப்பட்டதுடன், அந்த வாகனங்களில் கணக்காய்விற்கு தகவல் கிடைக்கப்பெற்ற 27 வாகனங்கள் (குத்தகை வாகனங்கள் தவிர) தொடர்பில் பின்வருமாறு 532,998 கிலோ மீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், ஓட்ட நிலைமையில் உள்ள 19 குழாம் வாகனங்களுக்காக (2 குத்தகை வாகனங்கள் நீங்கலாக) எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் ஆகியவற்றுக்காக ரூபா 1.94 மில்லியனும், 25 வாகனங்களை சேவைப்படுத்துவதற்காக ரூபா 11 மில்லியனும், பழுதுபார்த்தலுக்காக ரூபா 9.96 மில்லியனும் காப்புறுதி செய்வதற்காக ரூபா 2.06 மில்லயனுமாக ரூபா 24.96 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய 12 வாகனங்கள் தொடர்பில் அதற்கமைய அமைச்சினால் வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக சாரதி சம்பளம் மற்றும் படிகள் நீங்கலாக ஒரு கிலோமீட்டருக்கு ரூபா 47 செலவிடப்பட்டிருந்தது.

| | வாகனத்தின் வகை | வாகனங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சாரதி சம்பளம் மற்றும் படிகள் நீங்கலாக ஏனைய செலவினம் | ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட கிலோமீட்டர்களின் எண்ணிக்கை | ஓட்டத்தில் ஈடுபடுத்திய கிலோமீட்டருக்கான் செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 01 | ஜீப் | 8 | 101,100,000 | 7,787,000 | 233,712 | 33 |
| 02 | கார் | 8 | 22,080,000 | 3,093,541 | 106,349 | 29 |
| 03 | கெப் வண்டி | 9 | 37,270,000 | 14,029,508 | 187,468 | 75 |
| 04 | உந்துருளி | 2 | 399,000 | 45,820 | 5,469 | 8 |
| | **மொத்தம்** | **27** | **173,689,000** | **24,955,869** | **532,998** | **47** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) பழுதுபார்த்தல்கள்**

2017 சனவரி மாதம் 01 ஆந் திகதி வாகனத்தின் அறிக்கைக்கமைய ரூபா 4.5 மில்லியனான பெறுமதியுடனான ஜீப் வண்டியொன்றும் ரூபா 2.4 மில்லியன் பெறுமதியான காரொன்று முறையே 2016 சனவரி 06 ஆந் திகதி மற்றும் 2017 மார்ச் 03 ஆந் திகதி முதல் 2018 யூலை 26 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்க்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**(ii) ஏனைய அவதானிப்புகள்**

- 2017 யூன் 28 ஆந் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கொன்ரோல் ஜெனரால் அலுவலகத்திற்கு சொத்துக்கள் தொடர்பான தகவல்களை அனுப்பும் போது அமைச்சிற்கு சுவீகரிக்கப்பட்டுள்ள மற்றும் செலவினம் மேற்கொண்டுள்ள சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழான 91 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் முன்வைக்கப்பட்டிராததுடன், கணக்காய்விற்கான அடிப்படையை முன்வைத்த வாகனங்கள் தொடர்பான தகவல்களில், சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் காணப்படும் 88 வாகங்கள் தொடர்பில் தகவல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

- நிதிப் நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 இன் பிரகாரம் வாகனங்கள் தொடர்பான வருடாந்த பௌதீக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், வாகனங்கள் தொடர்பான மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிதி மற்றும் செயற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழான வாகனங்களின் பயன்பாடு**

அமைச்சினால் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் 03 வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்கான குத்தகை தவணைகளாக ரூபா 1.02 மில்லியனும், எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் ஆகியவற்றுக்காக ரூபா 99,067 தொகையும், குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களில் 5,759 கிலோமீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அந்த வாகனங்களின் ஒரு கிலோமீட்டர் ஓட்டத்திற்காக ரூபா 193 செலவிடப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

| | வாகனத்தின் வகை | வாகனங்களின் எண்ணிக்கை | வருடாந்த குத்தகை தவணைப் பெறுமதி | சாரதி மற்றும் படிகள் நீங்கலான ஏனைய செலவினம் | ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட கிலோமீட்டர்களின் எண்ணிக்கை | ஓட்டத்தில் ஈடுபடுத்திய கிலோமீட்டருக்கான செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 01 | வேன் | 01 | 1,019, 400 | 99,067 | 5,759 | 193 |
| 02 | டபள் கெப் | 02 | 2,275,831 | - | - | - |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட செயற்பாட்டுக் குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் வேன் வண்டிக்காக மாதாந்தம் 3000 கிலோ

மீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக மாதமொன்றிற்கு ரூபா 169,900 தொகையான (வற் நீங்கலான) ஆகக் குறைந்த தொகைக்கு அமைய மற்றும் அதிகரிக்கும் கிலோமீட்டரொன்றுக்காக ரூபா 20 (வற் நீங்கலாக) ஆக செலுத்துவதற்கு 2017 யூலை 07 ஆந் திகதி இணங்கியிருந்தது. அதற்கமைய யூலை முதல் திசெம்பர் வரையான ஆறு மாதங்களுக்கு ஓட்டத்தில் ஈடுபடுத்த வேண்டிய ஆகக்குறைந்த கிலோமீட்டர்களின் அளவான 18,000 கிலோமீட்டர்களுக்காக மாதாந்தம் ரூபா 355 முதல் ரூபா 1,541 வரையான வீச்சுடையவாறு 6 மாதங்களுக்கு 5,759 கிலோமீட்டர்கள் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 1,019,400 செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த வாகனம் ஒரு கிலோமீட்டர் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக ரூபா 177 எரிபொருள் செலவினத்திற்கு மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

(ii) அமைச்சினால் செயற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த இரண்டு டபள் கெப் வண்டிகள் 2017 ஆம் ஆண்டினுள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட கிலோமீட்டர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் அமைச்சிடம் இல்லாதிருந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**(இ) அலுவலகத்தினை நடாத்துவதற்கான செலவினம்**

அமைச்சிற்கு சொந்தமான கட்டிடம் 01 ஆக இருந்ததுடன், வருடாந்தம் ரூபா 31.67 மில்லியனான வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடமொன்றில் அலுவலகம் நடாத்திச் செல்லப்படுகின்றது. வருடாந்த சுத்திகரிப்புக் கட்டணம் ரூபா 2.98 மில்லியனாக இருந்ததுடன், பாதுகாப்பு சேவைகள் கட்டணம் ரூபா 1.92 மில்லியனாகும். அதற்கமைய மொத்த கட்டிடத்திற்குமான செலவினம் ரூபா 36.57 மில்லியனாக இருந்தது. அதற்கமைய நபரொருவருக்கான அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கான செலவினம் ரூபா 36.57 மில்லியனாக இருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சு அமைந்துள்ள கட்டிடத்திற்கான பாதுகாப்பு சேவைகளுக்காக வருகைப் பதிவேடொன்று பேணப்பட்டிருந்த போதிலும், அந்த பதிவேடு எல்லா சந்தர்ப்பங்களிலும் கட்டுப்பாட்டு பிரிவின் கீழ் நாளாந்தம் கண்காணிக்கப்பட்ட வேண்டிய போதிலும், வருகைப் பெயர்ப் பதிவேடானது, நிலையத்திற்கு பொறுப்பான பாதுகாப்பு உத்தியோகத்தரின் பொறுப்பில காணப்படுவதாகவும், கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக அந்த வருகைப் பதிவேடு அமைச்சினால் பயன்படுத்தப்படுவதாகவும் வெளிப்படுத்தப்பட்டது. இதற்கமைய மிகவும் நலிவான நிர்வாகமொன்று இது தொடர்பில் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ii) சுத்திகரிப்பு சேவைகளின் பெறுகையில் நடைமுறையின் போது தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் விண்ணப்பத்தில் காணப்படும் கணக்கீட்டு வழு சரி செய்யப்படாமையால் உடன்படிக்கை கைச்சாத்திடும் போது உடன்படிக்கையின் பெறுமதி ரூபா 1,132 தொகை மாதாந்தம் கூடுதலாக செலுத்துவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2016 ஏப்ரல் மாதம் முதல் 2017 யூலை மாதம் வரையிலும் ரூபா 16,983 கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. சுத்திகரிப்பு சேவையின் பதவியணியின் வருகை மற்றும் வெளிச்செல்லல் தொடர்பில் நலிவான கட்டுப்பாடொன்று நிலவுவதாகவும், மூன்று மாதங்களுக்கான விரலடையாள அறிக்கைகள் மற்றும் வருகைப் பதிவேட்டிற்கமைய மூன்று

மாதங்களான மாதிரிக்காக உடன்படிக்கைக்கு முரணாக ரூபா 49,474 கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**(ஈ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு, அந்த அறிக்கைகள் சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்திக்கமைய 2018 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அமைச்சினால் அந்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2018 ஆகஸ்ட் 27 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ii) சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் அமுலிலுள்ள புல் பேன்க் தொழில் பயிற்சி நிலையம், ரம்பொடை கலாசார நிலையம், நோர்வூட் விளையாட்டுத்தொகுதி மற்றும் பிரஜா சக்தி நிலையம் ஆகிய நான்கு நிறுவனங்களின் அசையும் மற்றம் அசையாத அனைத்து சொத்துக்களையும் அமைச்சின் கீழ் ஒப்படைப்பதற்கு 2016 யூன் 29 ஆந் திகதி அமைச்சரவை மேற்கொண்டு அந்த சொத்துக்களை உரிய முறையில் சுவீகரிப்பதற்கும், நிதிப்பிரமாணம் 755(1) மற்றும் (2) இன் பிரகாரம், அறிக்கைகள் தயாரித்து சமர்ப்பிப்பதற்கும், 2018 ஏப்ரல் 12 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி விடயங்களின் காரணமாக 2017 யூன் 28 ஆந் திகதிய 1/2007 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கொன்டிரோலர் ஜனரால் அலுவலகத்திற்கு சொத்துக்கள் தொடர்பில் அனுப்பிய தகவல்களின் பரிசோதனையின் போது அமைச்சினால் இந்த நான்கு நிறுவனங்களுக்குரிய சொத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சின் கட்டிடத்தின் தரைத் தளத்தில் அமைந்துள்ள அமைச்சிற்கு சொந்தமான பால் விற்பனை நிலையத்துடனான கட்டிடம் அமைச்சின் நலன்புரி பிரிவினால் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாது வெளித்தரப்பொன்றும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த பால் விற்பனை நிலையத்தின் நீர் மற்றும் மின்சாரத்திற்கான செலவினம் அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

## 2.7 கடப்பாடுகள் மற்றும் சொத்துக்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பாதீட்டு எல்லையினை மிகைத்து கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டமை**

(i) செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் செலவினை மேற்கொள்வதற்காக அமைச்சு வெளிவாரி நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைகளுக்கமைய கட்டுப்பாடுகளாக காண்பிக்க வேண்டிய வாடகை அடிப்படையில் 03 வாகனங்களுக்கு, பாதுகாப்பு சேவைகளை

பெற்றுக்கொள்வதற்கும் சுத்திகரிப்பு சேவைகளை பெற்றுக்கொள்வதற்கும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கடப்பாடுகளின் பெறுமதி மற்றும் வருடத்திற்கான ரூபா 15.09 மில்லியன் கூட்டுத்தொகையான கடப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த பொறுப்புக்களின் அளவும், அதற்கமைய ஆண்டின் இறுதியில் கடப்பாடுகளின் பெறுமதி ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) அமைச்சின் ஒதுக்கீட்டு கணக்கின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கடப்பாடுகள் மற்றம் பொறுப்புகள் ஏற்படுவதற்கான காரணமாக ‘‘ஆண்டின் இறுதியில் உடன்படிக்கை கைச்சாத்திடல்’’ ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களுக்குரிய கடப்பாடுகளுக்காக உடன்படிக்கைகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், மீதிகளின் சரியான தன்மையை பரீட்சிப்பதற்கு போதியளவான சான்றுகளாக புத்தகங்கள் (ஒப்பந்த பதிவேடுகள், பொறுப்புகள் பதிவேடு) முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அமைச்சு வெளிவாரி நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்குரியதாக கணக்காய்விற்கு முன்வைக்கப்படாத உடன்படிக்கைகளும் காணப்பட்டதுடன், அவற்றின் பெறுமதிகள் கடப்பாடுகளாக ஒதுக்கீட்டுக் கணக்கிலும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. (உதாரணம்: கட்டிட சேவைகள் உடன்படிக்கை, வளிச்சீராக்கி இயந்திர சேவைப்படுத்தல் உடன்படிக்கை) எனினும், கட்டிட சேவைப்படுத்தல் உடன்படிக்கைக்குரிய 2017 ஆம் ஆண்டிற்குரிய பொறுப்பொன்றான ரூபா 2,639,250 மாத்திரம் கணக்கில் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பொறுப்புகளை கூட்டிப் பதிதல்**

(i) அமைச்சினால் ஈஸ்ட் லங்கா தனியார் கம்பனிகள் இரண்டுடன் முறையே 2016 மே 23 மற்றும் 2016 ஏப்ரல் 20 ஆகிய திகதிகளில் ரூபா 212.96 மில்லியன் கூட்டுத்தொகைக்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டினுள் அவற்றுள் ரூபா 83.61 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய 2017 ஆம் ஆண்டிலுள்ள கடப்பாடுகள் ரூபா 129.36 மில்லியனாக இருக்க வேண்டிய போதிலும், ஒதுக்கீட்டுக் கணக்கில் இந்த இரு உடன்படிக்கைகளின் கீழ் ரூபா 151.30 மில்லியனான பொறுப்பொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய ஒரு தனியார் கம்பனிக்காக உடன்படிக்கையை மிகைத்து ரூபா 11.29 மில்லியன் மற்றும் மற்றைய தனியார் கம்பனிக்காக உடன்படிக்கையை மிகைத்து ரூபா 10.65 மில்லியன் பொறுப்புக்கள் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) அமைச்சினால் செலுத்தப்பட வேண்டியதாக காணப்பட்ட 2 செயற்திட்ட விடயங்களுக்குரிய ரூபா 3.24 மில்லியனான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிராததுடன், நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக நிதியேற்பாடுகளை மிஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்படல் 7 செலவின விடயங்களுக்குரியதாக ரூபா 5.56 மில்லியனாக இருந்தது.

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றனவாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**(அ) நிதிப்பிரமாணம் 139 இன் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

---

(i) தோட்ட வீட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வீட்டு நிர்மாணங்களும் எவ்விதமாக உடன்படிக்கையும் இல்லாது பெருந்தோட்ட மனிதவள நம்பிக்கைப் பொறுப்பிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களால் தோட்ட கூட்டுறவு சங்கங்களுடாக ஏனைய நிறுவனங்களுடன் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டு நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எவ்வாறெனினும், அமைச்சினால் காசோலைகள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் பெயரில் வழங்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அந்த நிர்மாணங்களுக்காக 2017 ஆம் ஆண்டினுள் பெருந்தோட்ட மனிதவள நம்பிக்கைப் பொறுப்பிற்கு நவ ஜீவன மற்றும் கிரீன் கோல்ட் வீடமைப்பு செயற்திட்டத்திற்காக ரூபா 1,364.50 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவுகள் அனைத்தும் கிடைக்கப்பெற்றதாக குறித்த தரப்பினரால் முன்வைக்கப்பட்ட பற்றுச்சீட்டு இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினூடாக தொழிலாளர் வீட்டு கூட்டுறவு சங்கங்களின் கீழ் உபஒப்பந்தம் வழங்கப்பட்ட நிர்மாணங்களுக்காக வீடமைப்பு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் அமைச்சினால் முன்வைக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கைக்கமைய வீடமைப்பு செயற்திட்டத்திற்காக நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 1.17 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட கொன்கிரீட் முறைமையின் கீழ் வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 2017 யூன் 14 ஆந் திகதிய பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் தோட்ட அதிகாரசபை ஆகியவற்றுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட கடிதம் (கருத்திட்ட தாள்) பிரகாரம் செயற்திட்டத்தின் ஆரம்ப திகதி 2017 மே 17 ஆந் திகதியாகவும் நிறைவு செய்யப்படவேண்டிய திகதி 2017 நவம்பர் 16 ஆந் திகதியும் ஆகும். எனினும், 2017 திசெம்பர் 21 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 50 மில்லியனில் அமைச்சினால் பெருந்தோட்ட மனிதவள நம்பிக்கைப் பொறுப்பிற்கு ரூபா 33 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு வீடும் பூர்த்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நலனாளிகளிடம் கடனை மீள அறவிடல் மற்றும் திறைசேரிக்கு செலவு வைத்தல் உரிய முறையில் இடம்பெறாமை**

---

(i) 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான வீடமைப்பு நிர்மாண வழிகாட்டலின் 9.2 ஆம் பந்திக்கமைய அறவிடப்படும் பணம் ஒவ்வொரு மாதமும் உரிய முறையில் அறவிட்டு அனுப்புதல் தோட்ட அதிகாரசபையினதும், தோட்ட தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் பொறுப்பாகுமெனவும் அந்த பணத்தை மாதாந்தம் வருவித்து, அதற்கடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் அரசின் திரட்டு நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக நேரடியாக அமைச்சிற்கு அனுப்ப வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், கடன் வழங்குவதற்காக நேரடியாக தொடர்புபடுவது மற்றும் கடன் உதவி பெறுபவர்களை தெரிவு

செய்தல் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் என்பதுடன், மேற்படி நிறுவனம் உரிய முறையில் அறிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு அறவிடப்பட்ட கடன் பணம் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு சேகரிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் ஆண்டறிக்கையின் இறுதிக் கணக்குகளுக்கமைய அவ்வாறு கடன் சேகரிக்கப்பட்டு அமைச்சிற்கு செலுத்தப்படாத 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 30.85 மில்லியன் மற்றும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 37.75 மில்லியனும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 33.25 மில்லியன் மீதியும் காணப்பட்டது. கடந்த வருடத்திலும் அமைச்சிற்கு செலுத்தப்படாத பணம் தொடர்பாக எங்களால் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அமைச்சிற்கு முறையே ரூபா 7.59 மில்லியன் மற்றும் ரூபா 7.47 மில்லியன் மாத்திரமே அறவிடக்கூடியதாக இருந்ததாக அவதானிக்கப்பட்டது. இதற்கமைய அரச நிதி முறையற்ற பாவனைக்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) கடன் அறவிடுதல் தொடர்பில் அபிவிருத்தி பணிப்பாளரால் வழங்கப்பட்ட அறிக்கைக்கமைய 2015 ஆம் ஆண்டு தோட்டங்களிலிருந்து ரூபா 958,405 தொகையும், வீடமைப்பு நிதியக் காசோலைகள் மூலம் ரூபா 975,820 தொகையும், 2016 ஆம் ஆண்டு தோட்டங்களிலிருந்து ரூபா 649,613 தொகையும், 2017 ஆம் ஆண்டு தோட்டங்களிலிருந்து ரூபா 9.20 மில்லியனும் வீடமைப்பு நிதியங்களின் காசோலைகள் மூலம் ரூபா 1.26 மில்லியனும் அறவிடப்பட்ட கடன் பணத்தை மீள அமைச்சிற்கு செலுத்தாமையினால் அமைச்சினால் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலுத்த வேண்டிய முகாமைத்துவக் கட்டணங்களான ரூபா 17.11 மில்லியனும், 2017 ஆம் ஆண்டின் போது ஈடுசெய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய, 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவிடப்பட்டுள்ள மொத்தக் கடன் மீதி ரூபா 30.15 மில்லியன் ஆகும். அத்திகதியில் உள்ளபடியான திறைசேரிக்கு அந்த மொத்த தொகையும் செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் கடனை அறவிட்டு பொதுத்திறைசேரிக்கு 2015 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 17.62 மில்லியன் மாத்திரமே செலவு வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எஞ்சிய ரூபா 12.53 மில்லியன் பெறுமதி பொது வைப்புக் கணக்கிலேனும் இல்லாதிருந்தமையால் ஈடுசெய்யப்பட்ட முகாமைத்துவ கட்டண மீதியானது செலவினமொன்றாகவும் வருமானமொன்றாகவும் சரியாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) புதிய வாழ்க்கை தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரியதாக 2017 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து காணப்பட்ட வழிகாட்டிக் கையேட்டின் 9.2 ஆம் பந்தியின் கீழ் நலனாளிகளிடமிருந்து கடன் பணத்தை மீள அறவிடல் தோட்ட வீடமைப்பு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்றாவது மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரையிலும் நவ ஜீவன தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மற்றும் கிரீன் கோல்ட் செயற்திட்டத்தின் கீழும் ரூபா 442.94 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றுள் கடன் மீள அறவிடப்பட வேண்டிய அளவானது நவ ஜீவன தோட்ட வீடுகளுக்காக ரூபா 232.24 மில்லியன் மற்றும் கிரீன் கோல்ட் இற்காக ரூபா 4.11 மில்லியனுமாக அறவிடப்பட வேண்டிய கடன் அளவானது ரூபா 236.46 மில்லியனாகும். எனினும், அபிவிருத்திப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட அறிக்கைக்கமைய 2017

திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட்டுள்ள மொத்த கடன் மீதியானது ரூபா 30.15 மில்லியனாகும். கடன் அறவிடலின் சராசரி 2017/1/1 ஆந் திகதி வழங்கப்பட்ட மொத்த கடன் பெறுமதியில் 7.45 சதவீத மாத்திரமாகும். அதற்கமைய கடன் அறவிடல் உரிய மேற்பார்வையுடன் இடம்பெறாமையால் மிகவும் நலிவானநிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(iv) அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய வீடுகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப்படும் கடன் பணத்திற்காக 4 சதவீதமான வட்டி அறவிடப்படுமென முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அந்த அறவிடலுக்கமைய 261/2017 ஆம் இலக்க மற்றும் 2017/12/21 ஆந் திகதிய அரச கணக்குகள் திணைக்களச் சுற்றறிக்கைக்கமைய அரச வருமானம் தொடர்பான அறிக்கையொன்றும் நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கையொன்று கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 நட்டங்கள் தொடர்பான பொறுப்பு

அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட வாகனமொன்றிற்காக 2017 பெப்ரவரி 12 ஆந் திகதி இடம்பெற்ற வீதி விபத்தொன்றின் காரணமாக வாகனத்திற்கான பழுதுபார்த்தல்கள் தொடர்பில் ரூபா 403,700 செலவிட நேர்ந்திருந்தது. எனினும் காப்புறுதி நிறுவனம் 2017 திசெம்பர் 09 ஆந் திகதி ரூபா 176,325 இனை மாத்திரம் வழங்குவதற்கு இணங்கியிருந்தது. மேலும், இது தொடர்பில் 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி கம்பஹா நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கமைய சாரதி வாகன விபத்தை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காது கவனமின்மையுடனும் வாகனத்தை உரிய கட்டுப்பாடின்றியும் செலுத்தியமை இந்த விபத்திற்கு காரணமாக அமைத்திருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு, விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கு பொறுப்புக்கூறு வேண்டிய தரப்பினரை இனங்காணல் மற்றும் உரிய நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவிடுதற்கு 2018 ஏப்ரல் 16 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.10 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த குறைபாடுகள் தொடர்பில் திணைக்களத்தினால் திருத்தப்பட்டிராத பந்திகளுக்கான தொடர்பு பின்வருமாறு

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புடைய வியடம் |
|---|---|---|
| **வருடம்** | **பந்தி இலக்கம்** | |
| 2016 | 3.10 | 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி ஒதுக்கப்பட்ட வாகனமொன்றிற்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக அதனை பழுதுபார்ப்பதற்கு ரூபா 1.03 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இந்த விபத்து தொடர்பில் நிதிப்பிரமாணம் 103(1)(ஆ) அவசர விபத்தொன்று நேர்ந்த போது பொலிசுக்கு அறிவிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்பட்டிராததுடன், நிதிப்பிரமாணம் |

| | | |
|---|---|---|
| | | 104(3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை, 2018 சனவரி 09 ஆந் திகதி தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், மூன்றாம் தரப்பினருக்கான காப்புறுதி மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வாகனத்திற்கு செலவிட நேர்கின்ற மொத்தப் பணமும் அரசிற்கு நேர்கின்ற நட்டமொன்றாவதுடன், அதனை குறைத்துக் கொள்வதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை இனங்காணுவதற்கும் 104(4) இன் பிரகாரம் இறுதி அறிக்கையை தயாரித்து, விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை இனங்காணல் மற்றும் உரிய நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவிடுவதற்கு 2018 ஏப்ரல் 16 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் நிறைவேற்றப்படும் செயற்திட்டங்களுக்காக அமைச்சினால் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றும் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணுதல். |
| 2016 | 3.7(ஊ)(i) | செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிராததுடன், அனைத்து செயற்திட்டங்களையும் மேற்பார்வை செய்யும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினூடாக அந்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் தோட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டமையின் பின்னர் அவர்களால் உப ஒப்பந்தம் வழங்குதல் இடம்பெற்றுள்ளதுடன், கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது அமைச்சு அனைத்து காசோலைகளையும் நேரடியாக ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்காது, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் பெயரில் வரையப்பட்டு வழங்கியமையால் மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் அந்த பணம் நிறுத்தி வைக்கப்பட்டமையின் அடிப்படையில் முறைகேடான பணம் பாவனையொன்றும் செயற்திட்டங்களின் நிர்மாணங்களின் ஏற்படக்கூடும் என்பது கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. |
| 2016 | 3.7(ஊ)(ii) | 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அவதானிப்புக்களினூடாக கணக்குப் பிரிவானது நேரடியாக அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு காசோலைகளை வழங்குவதாகவும், அதற்கமைய அபிவிருத்திப் பிரிவினால் காசோலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு மீண்டும் தபாலில் அனுப்புதல் அல்லது கையில் ஒப்படைக்கின்றமை மேற்கொள்ளப்படுமாயின், அந்த பிரிவினால் அவ்வாறு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்கப்படும் அனைத்து காசோலைகளுக்கும் காசோலை வரையப்பட்ட திகதி, காசோலை இலக்கம், அதற்கு பணம் செலுத்தும் வங்கி, அதனைப் பெற்றுக்கொள்வோர், பெறுமதி, உறுதிச்சீட்டு இலக்கம், காசோலை அனுப்பப்பட்ட திகதி, அந்தப் பணம் கிடைத்ததாக அறிவித்த திகதி மற்றும் அனுப்பல்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தரின் கையொப்பம் ஆகியன உள்ளடங்கிய பதிவேடொன்று நிதிப்பிரமாணம் 388 இன் பிரகாரம் பேணிச் செல்லப்பட வேண்டும் என்பது கடந்த வருடத்தினுள் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், |

| | | |
|---|---|---|
| | | மீளாய்வாண்டின் போதும், அபிவிருத்திப் பிரிவினால் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்கப்பட்ட காசோலைகளுக்காக மேற்குறிப்பிடப்பட்டவாறு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| 2016 | 3.7(ஊ)(iv) | இலங்கை நிதிப்பிரமாணம் கோவையின் 501(இ) மற்றும் 502(ஆ) இன் பிரகாரம் வீட்டு நலனாளிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகை, உரித்தினை பெற்றமைக்காக செலுத்தப்படும் பங்கினை கணக்கு வைத்தல் மற்றும் முதற்கொடுப்பனவிற்கான அதிகாரம் வழங்கப்படும் போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கமைய முழுமையான பணத்தையும் மீளஅறவிடுதலை உறுதிப்படுத்துவதற்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பணத்தை தாமதமின்றி சேகரிப்பதற்குரிய பணிகளில் திருப்திகரமாக செயன்முன்னேற்றமொன்றினை அடைந்து கொள்ளுதல் தொடர்பாக அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் குறித்து வைத்துக் கொள்வதற்கு புத்தகங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.11 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிர்மாண மற்றும் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் நாளொன்றிற்கான தாமதக் கட்டணம் ஒப்பந்தப் பெறுமதியில் 1/2000 ஆக இருக்க வேண்டியதுடன், பிடிகாசு 10 சதவீதமாக இருக்க வேண்டும். அதற்கு முரணாக வீடமைப்பு நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கைகளின் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் 2.5 சதவீதமெனவும், தாமதக்கட்டணம் நாளொன்றுக்கு ரூபா 500 ஆகவும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஒப்பந்தமானது எவ்வளவு காலம் தாமதிக்கப்பட்ட போதிலும், பரிசோதிக்கப்பட்ட 78 செயற்திட்டங்களுக்காக

(ஆ) ஒப்பந்தங்களுக்கான கொடுப்பனவு தொடர்பில் மாதிரியொன்றாக 2017 ஆம் ஆண்டிற்கான உறுதிச்சீட்டுக்களை பரீட்சிக்கும் போது அதனுடன் வெளியிடப்பட்ட காசோலைகளுக்காக அவை கிடைக்கப்பெற்றதாக நிதிப்பிரமாணம் 264 இன் பிரகாரம் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் பற்றுச்சீட்டுக்கள் கிடைத்திருக்கவில்லை.

(இ) அரச கணக்காய்வு பிரிவினால் 2017 ஆம் ஆண்டிற்காக 12 கணக்காய்வு ஐய வினாக்கள் வெளியிடப்பட்டுள்ள போதிலும், அவற்றுள் 9 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக 2 மாதங்கள் முதல் 1 மாதம் வரையிலும் தாமதமடைந்துள்ள போதிலும், 2018 செப்தெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2.12 பொதுமக்களுக்கான சேவையை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளல்**

அமைச்சிற்காக வலைத்தளமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும், அதனூடாக பொது மக்களின் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதும், பதிவேடொன்று இல்லாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) வீடமைப்பு செயற்திட்டங்களை நிறைவேற்றும் போது வறுமையில் வீடற்ற தேவையுடைய நபர்களுக்கு இந்த வீடுகள் கிடைப்பதில்லை என்பதும், தெரிவு செய்வதற்கு உரிய நடைமுறையொன்று இல்லாதிருந்தமையும் மக்களின் பிரதிநிதித்துவம் கிடைத்திருந்தது. வீடுகளை பெறுபவர்களை தெரிவு செய்யும் நடைமுறையொன்று அமைச்சிடம் காணப்படவில்லை என்பதும் தோட்ட முகாமைத்துவம் மற்றும் பெருந்தோட்ட மனிதவள நம்பிக்கைப் பொறுப்பு ஆகிய வெளிவாரி நிறுவனங்களால் வீட்டுரிமையாளர்கள் வெளிப்படைத் தன்மையுடன் இல்லாது தீர்மானிக்கப்படுகின்றமையால் முறைகேடுகள் நிகழக்கூடுமென்பது கணக்காய்வின் போதும் அவதானிக்கப்பட்டது.

(இ) கொட்டியாகல 140 வீடுகளை நிர்மாணிக்கும் உடன்படிக்கையினை கையளித்த 2016 மே 23 ஆந் திகதியின் பின்னரும் அதாவது 2016 யூன் 08 ஆந் திகதி இந்த செயற்திட்டத்திற்காக வீடுகளை நிர்மாணிக்கும் போது தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பின் மண்சரிவு ஆராய்ச்சிகள் மற்றும் இடர்கள் முகாமைத்துவ பிரிவினால் குறித்த அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையின் காரணத்தால் அந்த வழங்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் கவனத்திற் கொண்டு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மாதிரிகளுக்கு உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு அவை பின்பற்றப்பட்டிருக்கவில்லை என்பதும் வீடுகளை பயன்படுத்தாமை இந்த செயற்திட்டத்தின் 2017 நவம்பர் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(i) வீடுகளை நிர்மாணித்த இடமானது மிகவும் தாழ்வான பிரதேசமாவதுடன், மழைநீர் வழிந்தோடுகின்றமையால் வீடுகளை நிர்மாணித்த நிலமானது பாரதூரமான பாசிகளில் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்ததுடன், சில வீடுகளின் நிலையான தன்மைக்கு அது பாரிய அச்சுறுத்தலாக காணப்பட்டது. நுழைவுப் பாதையும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வீடுகளுக்கான நீர் மற்றும் மின்சார வசதிகளை வழங்காமையால் சாவிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும், எவரும் வீடுகளில் குடியேறியிருக்கவில்லை.

(ஈ) அமைச்சின் செயலாளரால் 2017 சனவரி 20 ஆந் திகதி மேற்படி செயற்திட்டத்தின் ஒப்பந்தகாரருக்கு இதுவரையிலும் ஒரு வீட்டினையாவது பூர்த்தி செய்து கையளித்திருக்கவில்லை என்பதும், சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் அத்திகதியிலிருந்து முடிவடைந்த 6 மாதங்களினுள் வேலைத்தளங்களுக்காக நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்பதும், உறுதியளித்தவாறு அத் திகதி வரையிலும் பொறியியலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்பதும், செயலாற்றல் மிகவும் நலிவான மட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், ஆரம்ப உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் நிறைவு செய்யப்பட்டிராத போது நியாயமற்ற காரணங்களை குறிப்பிட்டு அவ்வவ்போது உடன்படிக்கைக் காலம் நீடிப்பு செய்யப்பட்டிருந்தது.

(உ) மேலும், 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய கொட்டியாகல தோட்ட பிரதி முகாமையாளரின கடிதத்திற்கமைய 184 வீடுகளில் 42 வீடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு தேவையான காணிகள் இனங்காணப்பட்டுள்ள போதிலும், 2017 யூன் மாதத்தின் பின்னர் ஒப்பந்தகாரர் செயற்திட்டத்தை இடைநடுவில் நிறுத்தியுள்ளதாகவும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் உத்தியோகத்தர்கள் அல்லது அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஒப்பந்த தளத்தின் மேற்பார்வைக்கு சமூகமளித்திருக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 26 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது மேற்படி நிலைமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.13 தேயிலை பயிரிடுவதற்காக காணப்படும் காணியின் அளவானது நீண்டகால அடிப்படையில் குறைவடைகின்றமை**

அமப/15/0364/612/012 ஆம் இலக்க 2015 ஏப்ரல் 23 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கமைய தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரித்துடன் உண்மையான வீடொன்றின் உரித்தினை வழங்குவதற்காக கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் குறித்த நலனாளிகளுக்கு 07 பேர்ச் பரப்பளவான காணியொன்றும் வீடொன்றின் உரித்தினை சட்டரீதியாக பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் தோட்டத் தொழிலாளர்கள் அல்லாத ஏனைய தொழில்களில் ஈடுபடும் நபர்களும் நலனாளிகளாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அதற்கமைய இந்த நலனாளிகள் தோட்டத்தில் பணிபுரிவோர் 28 சதவீதமான குறைவான அளவானோர் என்பது கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**2.14 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **செலவு வகை** | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 189.28 | 188.93 | 0.35 | 0.18 |
| | மூலதனம் | 152.06 | 135.24 | 16.82 | 11.06 |
| | **மொத்தம்** | **341.34** | **324.17** | **17.17** | **5.19** |
| **2014** | மீண்டுவருபவை | 390.33 | 388.04 | 2.29 | 0.59 |
| | மூலதனம் | 4,441.57 | 4,301.16 | 140.41 | 3.16 |
| | **மொத்தம்** | **4,831.9** | **4,689.2** | **142.7** | **2.95** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2015** | மீண்டுவருபவை | 322.03 | 271.08 | 50.95 | 15.7 |
| | மூலதனம் | 824.44 | 785.80 | 38.64 | 4.7 |
| | **மொத்தம்** | **1,146.47** | **1,056.88** | **89.59** | **7.8** |
| **2016** | மீண்டுவருபவை | 223.42 | 189.12 | 34.30 | 15 |
| | மூலதனம் | 1,573.58 | 1,094.97 | 478.61 | 30 |
| | **மொத்தம்** | **1,797.00** | **1,284.09** | **512.91** | **29** |
| **2017** | மீண்டுவருபவை | 335.38 | 308.48 | 26.89 | 8 |
| | மூலதனம் | 4,032.51 | 2,116.24 | 1,916.27 | 47 |
| | **மொத்தம்** | **4,367.89** | **2,424.73** | **1,943.16** | **44** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை**

2 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 132.02 மில்லியனான மொத்த தேறிய நிதியேற்பாட்டில் எவ்வித பயன்பாடுமின்றி முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

9 செலவின விடயங்களுக்காக ரூபா 951.66 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் ரூபா 559.84 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால், சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(iii) குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்கள் மூலம் நிதியேற்பாடுகளை மேற்கொள்ளல்**

11 செலவின விடயங்களின் ரூபா 21.15 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 7.85 மில்லியன் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. அது அந்த 11 செலவின விடயங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையானதாகும். அதற்கமைய தேவையான அளவினை விட நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.15 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 140011 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 14.00 | 13.94 | 7.00 | 7.09 | 40.00 | 27.98 |

(ஆ) **நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளபடியாக இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் நீங்கலாக அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 478,625 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 01 முதல் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன

## 2.16 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சினால் பேணப்பட்டிருந்த கட்டுநிதிக் கணக்கு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கட்டுநிதி மதிப்பீட்டிற்கமைய மாதாந்தம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதிகள், மாதாந்தம் கோரிய கட்டுநிதிகள் மற்றும் கிடைத்த கட்டுநிதி தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| மாதம் | திட்டமிடப்பட்டவாறு விண்ணப்பிக்க வேண்டிய கட்டுநிதி | விண்ணப்பித்த கட்டுநிதி | கிடைத்த கட்டுநிதி | திட்டமிட்ட மற்றும் விண்ணப்பித்த கட்டுநிதிக்கிடையேயான வேறுபாடு | விண்ணப்பித்த கட்டுநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதிக்கிடையேயான வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சனவரி | 276.14 | 127.00 | 77.8 | 149.14 | 49.2 |
| பெப்ரவரி | 328.33 | 65.00 | 18.97 | 263.33 | 46.03 |
| மார்ச் | 328.64 | 100.00 | 18.97 | 228.64 | 81.03 |
| ஏப்ரல் | 376.87 | 100.00 | 73.27 | 276.87 | 26.73 |
| மே | 326.86 | 125.00 | 100.21 | 201.86 | 24.79 |
| யூன் | 285.42 | 160.00 | 131.1 | 125.42 | 28.9 |
| யூலை | 292.4 | 500.00 | 219.1 | (207.60) | 280.9 |
| ஆகஸ்ட் | 276.74 | 200.00 | 136.37 | 76.74 | 63.63 |
| செப்தெம்பர் | 276.85 | 375.00 | 231.2 | (98.15) | 143.8 |
| ஒக்தோபர் | 280.23 | 610.00 | 219.1 | (329.77) | 390.9 |
| நவம்பர் | 275.77 | 610.00 | 293.94 | (334.23) | 316.06 |
| திசெம்பர் | 39.41 | 800.00 | 381.04 | (760.59) | 418.96 |
| மொத்தம் | 3,363.66 | 3,772.00 | 1,901.07 | (408.34) | 1,870.93 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அமைச்சின் கணக்காய்வு ஐயவினாவிற்காக வழங்கப்பட்ட பதிலுக்கமைய நிதியேற்பாடு எஞ்சியமைக்கான காரணமாக கோரப்பட்ட கட்டுநிதி கிடைக்கப்பெறாமை குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய 2017 ஆம் ஆண்டினுள் மூலதன செலவினங்களுக்காக கோரப்பட்ட கட்டுநிதிகளில் ரூபா 1,871 மில்லியன் அதாவது 50 சதவீதம் கிடைத்திருக்கவில்லை. மேலும், அந்த மூலதன செலவினங்களுக்காக கோரப்பட்ட கட்டுநிதிகளில் ரூபா 2020 மில்லியன், அதாவது 53 சதவீதம் இறுதி 3 மாதங்களுக்குள் கோரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.17 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் கீழ் காணப்படும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214/447 (4,5) | ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் எஞ்சிய பொறுப்புக்கள் மற்றும் பிற்போடப்பட்ட பொறுப்புகளும் இனங்காண முடியாத விதத்தில் முழுமையற்ற பொறுப்புக்கள் தொடர்ான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பிணைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891 | பிணைகள் பதிவேடொன்று அமைச்சினால் பராமரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |

## 2.18 இணக்கமின்மைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 702(3) இன் பிரகாரம், அமைச்சினால் கைச்சாத்திடப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களும் மூன்று பிரதிகளில் கையொப்பமிடப்பட்டு அவற்றுள் ஒரு பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

## 2.19 உள்ளகக் கணக்காய்வு

கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தமது திணைக்களங்களின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள தமது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக, தமது திணைக்களங்களின் உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவப்பட வேண்டும் என்பது நிதிப்பிரமாணம் 133 இன் மூலம் சுட்டிக் காண்பிக்கப்படவில்லை. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளக கணக்காய்வு பிரிவு பிரதான உள்ளக கணக்காய்வு உள்ளடங்கல்களாக மூன்று உத்தியோகத்தர்களை மாத்திரம் கொண்டிருந்ததுடன், 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009/01 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கமைய உள்ளக கணக்காய்வும் பிரிவினை பலப்படுத்துவதற்கு கணக்குகள் மற்றும் கணக்காய்வு தொடர்பான அறிவினை கொண்ட பயிற்சி பெற்ற போதியளவான உத்தியோகத்தர்கள் கிளைக்கு இணைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 மார்ச் 24, 2016 நவம்பர் 09 ஆந் திகதி மற்றும் 2016 திசெம்பர் 16 ஆகிய நாட்களில் வழங்கப்பட்ட மூன்று கணக்காய்வு ஐயவினாக்களுக்காக 2018 யூலை 25 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்காக 2017 மார்ச் 20 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் 31 கணக்காய்வு ஐயவினாக்கள் வெளியிடப்பட்டிருந்ததுடன், 2018 யூலை 25 ஆந் திகதி வரையலும் 12 ஐயவினாக்களுக்கு மாத்திரம் பதிலளிக்கப்பட்டிருந்தது.

## 2.20 மனிதவள முகாமைத்துவம்

### 2.20.1 ஆட்சேர்க்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளனி வேதனம் ஆகியவற்றுக்கான செலவினம்

அமைச்சினால் தமது கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதிய செலவின தொகுதிக்காக ரூபா 209.64 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, நபருக்கான செலவினம் ரூபா 866,275 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 16 | 12 | 04 | - |
| (ii) | இரண்டாம் மட்டம் | 04 | 01 | 03 | - |
| (iii) | மூன்றாம் மட்டம் | 295 | 207 | 88 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 27 | 21 | 06 | - |
| (v) | அமைய/ஒப்பந்த | - | 01 | - | 01 |
| | **மொத்தம்** | 342 | 242 | 101 | 01 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) தேவையை மிகைத்து பதவியணியை அங்கீகரித்துக்கொள்ளல்**

(i) மேற்படி வெற்றிடங்களினுள் 20 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் 8 பதவிகளும், அலுவலக உதவியாளர் பதவிகளின் 12 இல் 5 பதவிகளும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2018 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள மதிப்பீடு தயாரிக்கும் போது 2017 ஆம் ஆண்டின் போது உள்ளபடியான சேவைகள் தொழில் விபரங்களை அடிப்படையாக கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அமைச்சிற்குரியதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணி மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கைக்கமைய வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையான 297 இல் மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 92 இனால் கூடுதலாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) மேற்படி பதவியணியினுள் 2016 யூன் 29 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கையேற்கப்பட்ட புல் பேன்க் தொழில்பயிற்சி நிலையம், ரம்பொட கலாசார நிலையம், நோர்வூட் விளையாட்டு தொகுதி மற்றும் பிரஜா சக்தி நிலையம் ஆகிய ஆறு நிறுவனங்களின் 185 ஊழியர்களுக்கும், மேற்படி அங்கீகாரத்தினுள் குறிப்பிடப்படாத சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் (தலைமை அலுவலக) 15 பதவியணிக்காகவும் அமைச்சினால் 1409 (ஏனைய) செலவினத் தலைப்பின் கீழ் சம்பளம் செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி |
|---|---|---|---|
| (i) | புல் பேன்க் தொழில்சார் பயிற்சி நிலையம் | 56 * | 35 |
| (ii) | ரம்பொடை கலாச்சார நிலையம் | 10 | 11 |
| (iii) | நோர்வூட் விளையாட்டு கட்டிடத் தொகுதி | 35 | 5 |
| (iv) | மக்கள் சக்தி நிலையம் - நிரந்தர | - | 102 |
| | - ஒப்பந்தம் | 158 | 32 |
| (v) | தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் | 29 | 15 |
| | மொத்தம் | 288 | 200 |

அங்கீகரிக்கப்பட்ட பதவியணி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

* சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் நிலவும் அமைச்சிற்கு கையேற்கப்பட்ட புல் பேன்க் தொழிற்பயிற்சி நிலையத்திற்குரிய பதவியணியானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அல்லது ஏனைய நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

* இந்த அமைச்சின் கீழ் சேவையில் ஈடுபடும் பெருந்தோட்ட மக்கள் தொடர்பாடல் வசதிகளை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 255 ஆக இருந்ததுடன், தற்போது 179 பேர் காணப்படுவதுடன், அவர்கள் பிரதேச செயலகங்களுக்கும், பிரதேசத்தில் நிலவும் வீடமைப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களுக்கும் இணைப்பு செய்யப்பட்டுள்ளதுடன், அந்த வீடமைப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்திட்ட மேற்பார்வை பணிகளுக்காக அவர்களுக்கு கடமைப் பட்டியல் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த விடயங்களை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை என்பது அவர்களின் கூற்றுக்களுக்கமைய உறுதிப்படுத்தப்பட்டது. மேலும், அவர்களின் கண்காணிப்பு அறிக்கைகள் ஒப்பந்த கொடுப்பனவுகளுக்காக முன்வைக்கப்படவேண்டும் என்பது அவர்களுக்கு கடமைகளை கையளிக்கும் போது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவற்றை கருத்திற் கொள்ளாது அமைச்சு கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்ததுடன், அவர்களை ஆக்கபூர்வமான செயலாற்றலுக்கு உட்படுத்தியிருக்கவில்லை எனபது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பதவியணியை பயிற்றுவித்தல்**

-----------------------------------------------------

பதவியணியை உரிய முறையில் பயிற்றுவிக்கும் தேவைப்பாடொன்று காணப்படுகின்றமையால், அமைச்சினால் அதன் பதவியணியை பயிற்றுவித்தல் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள விபரங்களுக்கமைய,

(i) ஆகக்குறைந்தது வருடமொன்றிற்கு 08 மணித்தியாலங்களேனும் பயிற்சியினை பெற்றிராத எண்ணிக்கை 34 ஆகும்.

(ii) கடந்த 5 வருடங்களினுள் பயிற்றுவித்தல் பணிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருந்தமை அளவினை ஒப்பிட்டு பார்க்கும் போது 2015 ஆம் நீங்கலாக ஏனைய வருடங்களின் நிதியேற்பாட்டில் 98 சதவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு

| ஆண்டு | தேறிய நிதியேற்பாடு | செலவினம் | சேமிப்பு | நிதியேற்பாட்டிலான பயன்பாடு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 2013 | 710,000 | 698,640 | 11,360 | 98.4 |
| 2014 | 3,520,000 | 3,508,859 | 11,141 | 99.68 |
| 2015 | 1,560,000 | 988,436 | 571,564 | 63.36 |
| 2016 | 1,000,000 | 997,876 | 2,124.00 | 99.79 |
| 2017 | 900,000 | 896,684 | 3,316 | 99.63 |

## 2.21 அரச ஊழியர்களுக்கு பிணை வைத்தல்

---------------------------------------------------------------------

நிதிப்பிரமாணம் 880 இன் ஏற்பாடுகளுக்கமைய பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு பிணைகள் பதிவேடொன்று அமைச்சினால் பேணப்பட்டிருக்கவில்லை.